

தலைமைச் செயலகத்தில் நேற்று (03.01.2025) நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் 2021–2022 முதல் 2024–2025 வரையிலான ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட பணிகளின் தற்போதைய நிலை குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீர்வளத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், காவேரி தொழில்நுட்ப குழும தலைவர் சுப்பிரமணியன், நீர்வளத்துறை சிறப்பு செயலாளர் ஸ்ரீதர், நீர்வளத்துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் சா.மன்மதன் மற்றும் மண்டல பொறியாளர்கள் மற்றும் மண்டல முதன்மை பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### நீர் வளத்துறையின் மூலம் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட

# 6 அணைகளின் பொறியாளர்களுக்கு ஊக்கத்தொகை - விருதுகள்!

## நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வழங்கினார்!

சென்னை, ஜன.4-

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நீர்வளத்துறையின் மூலம் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட 6 அணைகளுக்கான “சிறந்த அணை பராமரிப்பு” விருதுகளை வழங்கி னார்.

20112012 முதல் தமிழ்நாடு அரசு ஒரு குழுவினை அமைத்து சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட அணையினை ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுத்து அவ்வணையில் பணிபுரியும் உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் முதல் செயற்பொறியாளர் வரை ஊக்க தொகையாக ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/ மற்றும் கண்காணிப்பு பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் ஆகியோரை ஊக்குவிக்கும் வகையில் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, நேற்று (03.01.2025), தலைமைச் செயலகத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அரசால் அமைக்கப்பட்ட குழுவினரால் தேர்வுசெய்யப்பட்ட 2016 2017ஆம் ஆண்டிற்கு கன்னியாகுமரி மாவட்டம், பெருஞ்சாணி அணை, 2017 2018 ஆம் ஆண்டிற்கு ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணை, 20182019 ஆம் ஆண்டிற்கு தருமபுரி மாவட்டம், வாணியாறு அணை, 20192020 ஆம் ஆண்டிற்கு கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அணை, 20202021 ஆம் ஆண்டிற்கு சேலம் மாவட்டம், மேட்டூர் அணை மற்றும் 20212022 ஆம் ஆண்டிற்கு தென்காசி மாவட்டம், கருப்பாநதி அணை ஆகிய 6 அணைகளில் பணிபுரிந்த செயற் பொறியாளர், உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஊக்கத் தொகையாக ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/ வழங்கியும் தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நீர்வளத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், நீர்வளத்துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) எஸ். மன்மதன், நீர்வளத்துறையின் மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் திருமதி எம்.ஜானகி, ஆர்.தயாளகுமார், எஸ்.முருகேசன் மற்றும் எஸ்.ரமேஷ், நீர்வளத்துறையின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பிரிவின் தலைமைப் பொறியாளர் எஸ். கோபாலகிருஷ்ணன் மற்றும் நீர்வளத்துறை பொறியாளர்கள் கலந்துக்கொண்டனர்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, 2025 ஆண்டுக்கான சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடர் நடைபெறவுள்ளதால் சட்ட மன்றப்பேரவை அரங்கத்தினை நேற்று (03.01.2025) ஆய்வு செய்தார். இந்தஆய்வில் பொதுப்பணித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் சென்னை மண்டலம் எஸ்.மணிவண்ணன் மற்றும் பொதுப்பணித் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





